# SEC 3/4 HIGHER TAMIL WORKSHEETS (PAPER 2) - LEVEL 2

## உயர்நிலை 3/4 உயர்தமிழ் தேர்வுப் பயிற்சித்தாள் (தாள் 2) - நிலை 2

## பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | தேர்வுத்தாள் 1 | 1 - 10 |
| 2 | தேர்வுத்தாள் 2 | 11 - 20 |
| 3 | தேர்வுத்தாள் 3 | 21 - 30 |
| 4 | தேர்வுத்தாள் 4 | 31 - 40 |
| 5 | தேர்வுத்தாள் 5 | 41 - 50 |
| 6 | தேர்வுத்தாள் 6 | 51 - 60 |
| 7 | தேர்வுத்தாள் 7 | 61 - 70 |
| 8 | தேர்வுத்தாள் 8 | 71 - 80 |
| 9 | தேர்வுத்தாள் 9 | 81 - 90 |
| 10 | தேர்வுத்தாள் 10 | 91 - 100 |
| 11 | தேர்வுத்தாள் 11 | 101 - 110 |
| 12 | தேர்வுத்தாள் 12 | 111 - 120 |
| 13 | அருஞ்சொற்கள் (தேர்வுத்தாள் 1 to 12) | 121 - 129 |
| 14 | விடைத்தாள் | 130 - 150 |


WORDSMITH BEYOND LEARNING

**தேர்வுத்தாள் 1**

80

**'அ' பிரிவு**

**A1 முன்னுணர்வுக் கருத்தறிதல் (10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் பகுதியில் கோடிட்ட இடங்களை மிகப் பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்பவும்.**

**பொருளியலில்** வளர்ச்சி கண்ட நாடுகளில் சிங்கப்பூர் இன்னமும் தனது இரண்டாவது இடத்தினைத் தக்க வைத்துக் கொண்டிருக்கிறது என்பது ஒரு வியக்கத்தக்க உண்மை. இந்த இடத்தை அது Q1. ______________________ இருபத்து இரண்டு ஆண்டுகளாக **நிலைநாட்டி** வந்துள்ளது என்பது கண்கூடு. முதல் நிலையில் இருக்கும் ஹாங்காங் நாட்டுடன் Q2. ______________________ சிங்கப்பூர் வெறும் 0.8 புள்ளிகள் மட்டுமே பின்தங்கி உள்ளது. இந்த நிலைமை வரும் ஆண்டுகளில் உயர்ந்து நமது நாடு பொருளியல் வளர்ச்சியில் முதல் இடத்தைப் பிடிக்கும் Q3. ______________________ அதிகம் உள்ளது. சிங்கப்பூரின் **வலுவான** பொருளியல் வளர்ச்சிக்குக் காரணம் அது உலகளாவிய **வர்த்தக முதலீடுகளை** ஈர்க்கும் நாடாகத் திகழ்வதே ஆகும். நமது நாட்டின் பாதுகாப்பு, நமது **நாணயத்திற்கு** இருக்கும் பொருளாதார மதிப்பு போன்ற Q4. ______________________ வர்த்தகர்களை முழு மனத்துடன் முதலீடுகளைச் செய்வதற்கு ஊக்குவிக்கிறது. **வல்லரசான** அமெரிக்காவும் பொருளியல் வளர்ச்சியில் நமக்கு Q5. ______________________ இருப்பது குறிப்பிடத்தக்கது. அமெரிக்கா பொருளியல் வளர்ச்சியில் இவ்வாண்டு பதினொன்றாவது இடத்தில் இருக்கின்றது என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

WORDSMITH BEYOND LEARNING

**A2 பிழை திருத்தம் (10 மதிப்பெண்கள்)**

**கீழ்க்காணும் பகுதியின் இடப்பக்கத்தில் ஐந்து வினாக்களின் எண்கள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் எதிரிலுள்ள வரியில் ஒரு பிழையான சொல் உள்ளது. அந்த ஐந்து வரிகளிலும் உள்ள பிழையான சொற்களைத் திருத்தி, அச்சொற்களின் சரியான வடிவத்தை எழுதவும்.**

| | |
|---|---|
| | "பூமியின் பழமையான பண்பாடு, தொன்மையான கலாச்சாரம்" என்று பல |
| | வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுவது நமது இந்தியர்களின் கலாச்சாரத்தைத்தான். சுமார் |
| Q6 | 8000 ஆண்டுகளின் முன்பே நமது இந்தியக் கலாச்சாரம் தோன்றிவிட்டது என்று |
| | ஆராய்ச்சியாளர்கள் **பதிவு** செய்துள்ளனர். நமது கலைகள், நம்பிக்கைகள், பழக்க |
| Q7 | வழக்கங்கள், மரபுகள், சடங்குகள், சம்பிரதாயங்கள் போன்றது இந்திய மாநிலங்களுக்கு |
| | **மாநிலம்** வேறுபடினும், அவை யாவும் தொன்மையையே பறைசாற்றுகின்றன. |
| Q8 | நாகரிகத்தின் உச்சத்தில் இருக்கும் நாடுகளால் இன்று யோகக்கலை பரவலாகப் |
| | பயிலப்பட்டு வருவதை நாம் காண்கிறோம். இக்கலை நமது இந்தியப் பாரம்பரியத்தின் |
| Q9 | வேர் என்பதை வெகு சிலரே அரிந்திருப்போம். தோப்புக்கரணம் போடும் பாரம்பரியத்தைச் |
| Q10 | சேர்ந்து நாமே இன்று அதனை 'சூப்பர் யோகா' என்று ஆங்கிலேயர்கள் சொல்வதைப் |
| | பணம் கொடுத்துப் பயின்று வருகிறோம். இவ்வாறு பலவற்றுக்கு **உரிமையாளர்**களான |
| | நாம், இன்று அவற்றையே மற்ற இனத்தாரிடமிருந்து விலைகொடுத்து வாங்கும் |
| | நிலையில் இருக்கிறோம். |

Q6 ____________________________

Q7 ____________________________

Q8 ____________________________

Q9 ____________________________

Q10 ____________________________

**‘ஆ’ பிரிவு**

**B3 சொற்புணர்ச்சி (10 மதிப்பெண்கள்)**
**பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதவும்.**

Q11 மெல்லினம் = ______________________ + ______________________

Q12 மதிநுட்பம் = ______________________ + ______________________

Q13 மாவிலை = ______________________ + ______________________

Q14 கலையார்வம் = ______________________ + ______________________

Q15 பத்தொன்பது = ______________________ + ______________________

**‘இ’ பிரிவு**

**C4 கருத்தறிதல் 1 (22 மதிப்பெண்கள்)**

**பின்வரும் பனுவலைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியிற்காணும் வினாக்களுக்கு உனது சொந்த நடையில் விடை எழுதவும்.**

| சிகரம் மின்னிதழ் | உங்கள் கருத்து | சிறப்புக் கட்டுரை | கடந்த இதழ் |
|---|---|---|---|
| **எண்ணம் போல் வாழ்க்கை** | | | |
| சவால்கள் என்பன இன்றைக்கு நேற்றைக்கு **உதித்தவை** அல்ல. அவற்றைக் காலங்காலமாக மனிதன் கடந்துதான் வந்துள்ளான். ஆதி மனிதன் தன் வாழ்நாளைக் கழிக்க விலங்கினங்களைச் சமாளித்து, அதனுடன் கூட்டுறவு கொள்ள வேண்டியிருந்தது. கொடிய விலங்குகளோடு போராடி, தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளப் பல சாதனைகளைப் புரிந்தான். நாகரிகம் **தலைதூக்கியபோது** தன் நடைமுறைகளை மாற்றி ஆடை அணிகலன்களை அணிந்துகொண்டு விலங்கினங்களுக்கு அப்பால் நிற்கக் கற்றுக்கொண்டான். இப்போது தொழில்நுட்பத்துடன் போட்டி போட்டுக்கொண்டிருக்கும் மனிதனுக்கு ஒவ்வொரு நாளும் சவால் மிகுந்ததாகவே இருக்கிறது.<br><br>சவால்கள் சமாளிக்க முடியாதவையல்ல. சவால்கள் இருந்தால்தான் வாழ்வே சுவாரஸ்யமிக்கதாக இருக்கும் என்று மேதாவிகள் கூறுகிறார்கள். ஒன்று எவ்விதச் சிரமமுமின்றி நமக்குக் கிடைக்கும்போது அதன் அருமைகள் நம் கண்ணைவிட்டு மறைந்துவிடும். நம் கையைவிட்டு அது **நழுவி**ப்போகும்போதுதான் அதன் மதிப்பை நாம் | | | |

WORDSMITH BEYOND LEARNING

உணர்வோம். எதிலும் சிறிதளவாவது சவால்கள் இருக்கும்போது, அதை அடைய வேண்டும் என்ற **உத்வேகம்** நம்முள் ஏற்படும். அது கிடைத்தவுடன் அதனைப் பாதுகாக்கும் பணியிலும் நாம் அதிகம் கவனம் செலுத்துவோம். பல இன சமுதாயமான நம் சிங்கப்பூரில் இன நல்லிணக்கத்தைக் கட்டிக்காப்பதற்கு நம் அரசாங்கம் பல சவால்களைக் கடந்து வந்திருப்பதை நமது வரலாற்று ஏடுகள் ஒவ்வொன்றும் **எதிரொலி**க்கும். அது, வரும் நூற்றாண்டுகளிலும் நிலைக்க வேண்டும் என்பதற்காக **அடைகாக்கும்** பறவை போல நம் அரசாங்கம் இன நல்லிணக்கத்தைப் பாதுகாத்து வருகிறது. இதற்குக் காரணம் பல சவால்களுக்கிடையில் அதனைப் பெற்றதே ஆகும்.

சவால்களை நாம் பிரச்சனைகளாக எண்ணக்கூடாது. அவ்வாறு எண்ணும்போது நம் மனம் அவற்றை ஏற்க மறுத்துவிடும். அவை பாரமாக மாறி நம் மனத்தைக் **குலைத்துவிடும்**. பிரச்சனைகளால் ஏற்படக்கூடிய விளைவுகளைப் பற்றி அதிகமாக யோசிக்கும் மனம், அவற்றை எதிர்கொண்டு போராடும் வழியைப் பற்றிச் சிந்திக்கத் தவறிவிடும். பிரச்சனைகளைச் சவால்களாக நினைக்கப் பழகிக் கொண்டோமானால் அவை வாழ்க்கையின் படிக்கற்களாகி நம்மை முன்னேற்றும்.

*'கல்லைக் கண்டால் நாயைக் காணோம், நாயைக் கண்டால் கல்லைக் காணோம்'* என்ற பழமொழி கூறுவதுபோல, எப்பொருளும் நாம் காணும் காட்சியில் தான் அமைந்துள்ளது. எதையுமே சாதித்துக்காட்ட முடியும் என்று தொடக்கத்திலேயே எண்ண வேண்டும். அத்தகைய எண்ணம் எடுத்த எடுப்பிலேயே வருவதென்பது சாத்தியப்படாத ஒன்று தான். வெற்றியாளர்களின் சாதனைக் குறிப்புகளிலிருந்து படித்துத் தெரிந்துக்கொள்வதன் மூலம் நாம் அதனை வளர்த்துக்கொள்ளலாம். மாறாக, முடியாது என்ற விதையை நம் ஆழ்மனத்தில் தொடக்கத்திலேயே விதைத்துவிட்டால் அது நம் செயல்திறனை **முடக்கி**, சாதனைகளைச் செய்ய விடாமல் கட்டிப்போட்டுவிடும்.

**வெங்கடேசன்**

**வினாக்கள்**

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு தெரிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப்பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை எழுதவும்.**

Q16 ‘சவால்கள் என்பன இன்றைக்கு நேற்றைக்கு உதித்தவை’ அல்ல என்பதை நாம் எதன் மூலம் அறிந்துகொள்ளலாம்? (2 மதிப்பெண்கள்)

(A) மனிதன் தொழில்நுட்பத்தின் மூலம் ஏற்பட்ட சவால்களைச் சமாளித்ததன் மூலம்
(B) மனிதன் விலங்கோடு போராடி வாழ்க்கை நடத்தியதன் மூலம்
(C) மனிதன் விலங்குகளுக்கு அப்பால் செல்லக் கற்றுக் கொண்டதன் மூலம்
(D) மனிதன் பலவிதமான ஆடைகள் மற்றும் அணிகலன்களை அணிந்துக் கொண்டதன் மூலம் ( )

Q17 எத்தகைய பொருளை நாம் அதிக சிரமம் எடுத்துப் பாதுகாப்போம்? (2 மதிப்பெண்கள்)

(A) சிரமமின்றிக் கிடைத்த பொருளை
(B) அருமையைப் பற்றி அறிந்த பொருளை
(C) நிறைய சவால்களுக்கிடையில் கிடைத்த பொருளை
(D) கைநழுவிப்போன பொருளை ( )

Q18 பிரச்சனைகளை வாழ்க்கையில் படிக்கற்களாக மாற்றுவதில் எது தடையாக அமைகின்றது? (2 மதிப்பெண்கள்)

(A) பிரச்சனைகளை ஏற்க மறுக்கும் மனம்
(B) பிரச்சனைகளைச் சவால்களாக நினைக்க பழகி கொள்ளுதல்
(C) சவால்களைப் பிரச்சனையாக கருதுவது
(D) முடியாது என ஆழ்மனத்தில் விதைத்துவிடுவது ( )

Q19 பின்வரும் வாக்கியத்திலுள்ள சுட்டெழுத்து, பெயரெச்சம் ஆகியவற்றை கண்டறிந்து எழுதவும். (4 மதிப்பெண்கள்)

“*கல்லைக் கண்டால் நாயைக் காணோம், நாயைக் கண்டால் கல்லைக் காணோம் என்ற பழமொழி கூறுவதுபோல, எப்பொருளும் நாம் காணும் காட்சியில் தான் அமைந்துள்ளது*”

(i) சுட்டெழுத்து

____________________________

(ii) பெயரெச்சம்

____________________________

**Q20 சுருக்கி வரைதல் (12 மதிப்பெண்கள்)**

சவால்கள் நிறைந்த வாழ்க்கையின் விளைவுகளைக் குறித்துக் கட்டுரையாசிரியர் கூறியுள்ளவற்றைப் பொருள் பிறழாது உன் சொந்த நடையில் 40 சொற்களில் சுருக்கி எழுதவும்.

WORDSMITH
BEYOND LEARNING
EQ SKILLS = JUMP grades + achieve Big

**‘ஈ’ பிரிவு**

**C5 கருத்தறிதல் 2 (28 மதிப்பெண்கள்)**

**பின்வரும் பனுவலைக் கருத்தூன்றிப் படித்து, அதையொட்டிய வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுதவும்.**

இன்றைய உலகம் அனுபவக் கல்வியை நோக்கிச் செல்லும் ஒரு சமுதாயம். இதற்குச் சிங்கப்பூர் விதிவிலக்கல்ல. அனுபவமே ஒரு மாணவனுக்கு நல்ல ஆசான் என்பதனால் கற்றலுக்கு ஏற்ற பல அனுபவங்களையும் பாடசாலைகளையும் அவனுக்கு ஏற்படுத்திக் கொடுக்கின்றது. அனுபவப் பூர்வமாகக் கற்றல் நடைபெறும்போது அது மாணவனின் மனத்தில் நிலையாய் நிற்கிறது. புத்தகத்தில் படிப்பவை யாவும் நாளடைவில் அதிலுள்ள எழுத்துகள்போல அவன் நினைவிலிருந்து **மக்கி**ப் போய்விடுகின்றன. ***‘ஏட்டுச்சுரைக்காய் கறிக்கு உதவாது’*** என்று நம் முன்னோர்கள் எழுதி வைத்துள்ள பழமொழியும் இதனையே **இயம்புகிறது**.

அனுபவம் என்பது இரு வகைப்படுகிறது. ஒன்று தனக்கு நடப்பது; மற்றொன்று இன்னொருவருக்கு நடப்பது. இரண்டுமே ஒருவருக்குப் படிப்பினைகளைத் தர **வல்லவை**. அனுபவம் தனக்கு நடக்கும்போது அதன் பாதிப்பு முழுமையாக அனுபவிப்பவரை சென்று சேர்கிறது. மாறாக, அது மற்றவருக்கு ஏற்படும்போது அதன் பாதிப்பு ஓரளவு மட்டுமே அவருக்குச் செல்கிறது. எது எப்படியிருப்பினும், அனுபவத்தின்மூலம் நாம் கற்றுக்கொள்ளும் பாடம் காலத்தால் அழியாதவையாக அமைந்துவிடுகின்றன. நீச்சல் கற்றுக்கொள்ள விரும்பும் ஒருவர், அதன் படிநிலைகளை ‘முப்பது நாள்களில் நீங்களும் ஒரு நீச்சல் வல்லுநர்’ எனும் புத்தகத்தில் மட்டும் படித்துத் தெரிந்துகொண்டு கடலில் போய் நீந்த முடியுமா? அது இயலாத **காரியம்** அல்லவா! முன்பின் அனுபவம் இல்லாமல் ஆழ்கடலில் போய் நீந்துவது நம் உயிரையே **மாய்த்துவிடும்**. **கைதேர்ந்த** நீச்சல் வல்லுநரிடம் முறையான பயிற்சியை மேற்கொண்டு, நீந்தக் கற்றுக்கொண்ட பிறகே நாம் நீச்சலில் ஈடுபட முடியும் என்பது யாவரும் அறிந்த உண்மை. அனுபவத்தை வளர்த்துக்கொள்ள நமக்குப் பயிற்சி அவசியம் தேவை. நாம் எடுத்துக்கொள்ளும் பயிற்சியே நம் அனுபவத்தை அளவிடும். எடுத்துக்காட்டுக்கு, தமிழ்மொழியில் சிறந்து விளங்க வேண்டும் என்ற எண்ணும் கொண்ட ஒரு மாணவன் அம்மொழியில் பேசியும் எழுதியும் அனுபவம் பெற வேண்டும். ***பயிற்சியே அனுபவம், அனுபவமே பயிற்சி!***

அனுபவம் ஒரு மாணவனை புடம் போட்ட தங்கமாக **மிளிர**ச் செய்கிறது. எவ்வாறு மற்றவர்களிடம் உரையாடுவது, தன்னம்பிக்கையுடன் செயல்படுவது, பணிவன்புடன் நடந்துகொள்வது, கனிவன்பைக் கடைப்பிடிப்பது போன்ற **விழுமியங்களை** அனுபவம் மூலமே

மாணவர்கள் கற்றுக்கொள்ள முடியும். அவற்றை எந்த நூலிலும் படித்து உணர முடியாது. ஆகவேதான் பள்ளிகளில் கற்றல் பயணங்கள், முகாம்கள், வெளியூர் பயணங்கள் போன்றவை ஏற்பாடு செய்யப்படுகின்றன. எதிர்காலத்தில் மாணவர்கள் வெறும் **கிணற்றுத் தவளைகளாக** இல்லாமல் சவால்களை எதிர்நோக்கும் சாதனையாளர்களாக உருவாக வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும்.

**வினாக்கள்**

Q21 *'ஏட்டுச்சுரைக்காய் கறிக்கு உதவாது'* என்னும் பழமொழி எவ்வாறு இன்றைய சூழ்நிலைக்குப் பொருந்தும்? (5 மதிப்பெண்கள்)

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

WORDSMITH
BEYOND LEARNING
EQ SKILLS = JUMP GRADES + achieve Big

Q22 அனுபவம் எவ்வாறு வகைப்படுகிறது? அவை ஒருவரை எவ்வழிகளில் பாதிக்கிறது? (5 மதிப்பெண்கள்)

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

Q23 ‘*பயிற்சியே அனுபவம், அனுபவமே பயிற்சி*’ என்பதற்குக் கட்டுரையாசிரியர் கூறும் சான்றுகள் யாவை? (6 மதிப்பெண்கள்)

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

Q24 மேற்கண்ட பனுவலைப் படித்த சீதாவும் நாதனும் கருத்துரைக்கின்றனர்.




சீதாவின் கருத்தை நாதன் ஏற்றுக்கொள்வதற்கான இரண்டு காரணங்களைப் பனுவலை அடிப்படையாகக்கொண்டு எழுதவும். (4 மதிப்பெண்கள்)

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

**Q25 சொற்பொருள் (8 மதிப்பெண்கள்)**

பின்வரும் சொற்கள் மேற்கண்ட பனுவலில் இடம்பெற்றுள்ளன. அவை உணர்த்தும் பொருளை எழுதவும்.

(i) மக்கி - ____________________

(ii) காரியம் - ____________________

(iii) மாய்த்துவிடும் - ____________________

(iv) மிளிர - ____________________

WORDSMITH
BEYOND LEARNING
EQ SKILLS = JUMP GRADES + ACHIEVE BIG

## அருஞ்சொற்பொருள்

| தேர்வுத்தாள் 1 | | | |
|---|---|---|---|
| எண் | அருஞ்சொல் | பொருள் | **English Meaning** |
| 1. | பொருளியல் (பொருளியலில்) | நிதிநிலை | Economy |
| 2. | நிலைநாட்டு (நிலைநாட்டி) | ஒன்றை நிலைத்து இருக்கும்படி செய்தல் | Existence |
| 3. | வலு (வலுவான) | பலம் | Strength |
| 4. | வர்த்தக முதலீடுகள் (வர்த்தக முதலீடுகளை) | தொழிலில் முன்பணம் போடுதல் | Business investment |
| 5. | நாணயம் (நாணயத்திற்கு) | பணம் | Money |
| 6. | வல்லரசு (வல்லரசான) | பலம் கொண்ட அரசாங்கம் | Superpower goverment |
| 7. | பதிவு | குறித்து வைத்தல் | Record |
| 8. | மாநிலம் | நாட்டின் சிறு பிரிவு | States |
| 9. | உதித்தல் (உதித்தவை) | தோன்றுதல் | Rising |
| 10. | தலைதூக்குதல் (தலைதூக்கியபோது) | வளர்தல் | Grow |
| 11. | நழுவி | பிடிமானமில்லாமல் விழுவது | Slipped |
| 12. | உத்வேகம் | ஊக்கம் | Inspiration /Encouragement |
| 13. | எதிரொலி | சத்தத்தின் பிரதிபலிப்பு | Echo |
| 14. | அடைக்காத்தல் (அடைகாக்கும்) | பாதுக்காத்தல் | Protect |
| 15. | குலைத்தல் (குலைத்துவிடும்) | தடுமாற செய்தல் | Break |
| 16. | முடக்குதல் (முடக்கி) | மூடுதல் | Off |
| 17. | இயம்புகிறது (இயம்புதல்) | கூறுகிறது | Saying |
| 18. | வல்லவை | ஆற்றல் பெற்றவை | Powerful |

**SEC 3/4 HIGHER TAMIL WORKSHEETS (PAPER 2) - LEVEL 2**
**உயர்நிலை 3/4 உயர்தமிழ் தேர்வுப் பயிற்சித்தாள் (தாள் 2) - நிலை 2**

# விடைத்தாள்

**தேர்வுத்தாள் 1**

**A1 முன்னுணர்வுக் கருத்தறிதல்**

Q1 கடந்த
Q2 ஒப்பிடுகையில்
Q3 வாய்ப்பு
Q4 அம்சங்கள்
Q5 பின்னே

**A2 பிழை திருத்தம்**

Q6 ஆண்டுகளுக்கு
Q7 போன்றவை
Q8 நாடுகளில்
Q9 அறிந்திருப்போம்
Q10 சேர்ந்த

**B3 சொற்புணர்ச்சி**

Q11 மென்மை + இனம்
Q12 மதி + நுட்பம்
Q13 மா + இலை
Q14 கலை + ஆர்வம்
Q15 பத்து + ஒன்பது

**C4 கருத்தறிதல் 1**

Q16 B
Q17 C
Q18 C
Q19 (i) எப்பொருளும்
(ii) காணும்

Q20 மனிதன் விலங்குகளோடு போராடி பல சவால்களைக் கடந்து வந்ததால்தான் இன்று தொழில்நுட்பத்துடன் போட்டிப் போடும் அளவிற்கு வளர்ந்துள்ளான். செய்யும் செயலில் சவால்கள் இருப்பதனால்தான் உத்வேகம் கொண்டு அதனைச் செய்து முடிக்க முயல்கிறோம். அதோடு, கிடைத்ததைத் தக்கவைத்துக் கொள்ள மிக கவனமாக செயல்ப்படுகிறோம். சவாலின்றி ஒரு செயலைச் செய்யும்போது நமக்குள் போராடும் சிந்தனை வளராமலேயே இருந்துவிடுகிறது.

**C5 கருத்தறிதல் 2**

Q21 இன்றைய உலகம் அனுபவக் கல்வியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. அதோடு கற்றலுக்கு ஏற்ற பல அனுபவங்களைப் பள்ளிகள் மாணவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கின்றன. புத்தகக் கல்வி மாணவர்களின் மனத்தில் அதிகம் நிற்காது என்பதைப் பள்ளிகள் உணர்ந்து அனுபவக் கல்விக்கே அதிக முக்கியத்துவம் தருகின்றன. அனுபவப்